திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 127 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். இதன் மூலம் எத்தனை மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும்? வேறு இடங்களில் இத்தகைய திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவர் அவர்களே, 100 வாட் மின்திறன் உள்ள நான்கு யூனிட்டுகள் இந்தத் திட்டத்தின் மூலம் அமைக்கப்படும். இந்தத் திட்டத்தின் நோக்கம், மின்தேவை எப்போது ஏற்படுகிறதோ அப்போது இந்த அணையில் இருந்து வருகின்ற நீரைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்துகொண்டு, நள்ளிரவில் மின்தேவை திடீரென்று குறைகிறபோது, அனல் மின்நிலையத்தின்மூலம் நீரை அணைக்கு திரும்பக்கொண்டுவருவதற்கானதாகும். ஆகவே, இது மின் உச்சக் கட்டத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவே தவிர, கூடுதலாக அதிகமான பலனைத் தந்து விடாது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீர் அழுத்த மின் நிலையம் கோவை மாவட்டத்தில் அமைந்துள்ளது. தொழிற்சாலைகள் நிரம்பியுள்ள கோவை மாவட்டத்தில் அனல் மின்நிலையம் அமைக்க அரசு முன்வருமா? தனியார் அனல் மின்நிலையம் அமைக்க முன்வந்தால் அரசு ஆதரவு அளிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி நீர் அழுத்த மின் நிலையத்தைப் பற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் இத்தகைய கேள்விகளை எழுப்பினால், அமைச்சர் எப்படி பதில் அளிக்க முடியும்?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

குந்தா ஐந்தாம் நீர் மின் நிலையம்.

*வினா எண். 2 திரு. கே. உச்சி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குந்தா ஐந்தாம் மின் நிலைய கட்டுமானப் பணிகள் எப்பொழுது துவங்கப்படும்?

(ஆ) அதற்கான திட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) குந்தா ஐந்தாம் நீர்மின் நிலையம் ஏற்கனவே இயங்கி வருகிறது. இம்மின் நிலையத்தில் ஒரு கூடுதல் 20 மெகாவாட் திறன் கொண்ட பிரிவு அமைக்க மத்திய அரசின்ஒப்புதல் பெறப்பட்டு ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.503 இலட்சங்களாகும்.

திரு. கே. கல்லன்: தலைவர் அவர்களே, குந்தா ஐந்தாவது மின் நிலையம் பயன் உள்ளதாக இருக்கவேண்டுமானால், ஏற்கனவே, அந்த நீர்த்தேக்கத்திற்கு வரும் ஊற்றுகள் சரியாக இருக்க வேண்டும். அவைகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊற்றுகள் பராமரிக்கப்படுவது பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால் அங்கே கூடுதலாக 20 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(முற்பகல் 9.10)

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பூமிக்கடியில் இருக்கிற நீரைக் கொண்டுவர முயற்சி செய்து, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கு இது சம்பந்தமில்லை.

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, கோத்தகிரி, ஆவக்கல், கிளப்பி, முள்ளூர் கீழ்த்தட்டப் பள்ளம் முதலிய ஐந்து ஆறுகள் ஒன்று சேருகின்ற மொழிகரையில் ஒரு மின்சார நிலையம் அமைக்க அரசு முயற்சி செய்யுமா? அதற்கான ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, இந்தத் திட்டமானது செயல்பட்ட பிறகு எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்? எவ்வளவு மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, திட்டம் செயல்பட்டால் மின் உற்பத்தித்தான் கிடைக்கும். வேலை வாய்ப்பு அதிகம் கிடைக்காது.

சென்னை மாநகரிலுள்ள பால் விற்பனை நிலையங்களுக்கு பால் விநியோகம் செய்யும் லாரிகள்

*வினா எண் 3—திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—